
# கண்ணீர்க் கடல் பத்து



பூவைசரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் கடல் பத்து

- பூவைசரவணன்-

## 2004 – 2014

## சுனாமி அஞ்சலிக் கவிதைகள்

பூவை சரவணன்
தொடர்மாடி வீட்டுத் திட்டம்
கல்முனை-01D

26.12.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பூபாலபிள்ளை சரவணபவா என்னும் இயற்பெயரையுடைய பூவைசரவணன் இப்பிரதேசமெங்கும் பலராலும் நன்கு அறியப்பட்ட ஒரு கவிஞராவார். தனது பாடசாலைப் பருவத்திலிருந்தே இவர் கவிதை எழுதத் தொடங்கியவர். கவிதை எழுதுவதில் பாண்டித்தியம் பெற்ற எவரிடமிருந்தும் இவர் அதனை முறையாகக் கற்றுக் கொள்ளாத போதும் இயல்பாகவே அத்துறையில் இவருக்கிருந்த ஆர்வமும், தமிழறிவும் இவரை எழுதத் தூண்டியிருக்க வேண்டும். இவைமட்டுமன்றி, அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த சில தமிழறிஞர்களுடன் இவர் தொடர்புகளைக் கொண்டிருந்தமையும் இவரது இம் முயற்சிக்கு உந்து சக்தியாக அமைந்திருக்கக் கூடும்.

வாழ்த்துப்பா பாடுவதில் வல்லவரான பூவை சரவணன் இப்பிரதேசத்தில் நடைபெறும் திருமணங்கள், புதுமனை புகுதல், பதவி உயர்வு போன்ற பல்வேறு வைபவங்களிலும் கலந்து கொண்டு பெருமளவிலான வாழ்த்துப்பாக்களைப் பாடியுள்ளார். அதேபோன்று மரணவீடுகளுக்கு அஞ்சலிக் கவிதைகள் எழுதுவதற்கும் இப்பிரதேச மக்கள் இவரையே நாடுவர். இவ்வாறு இவர் எழுதிய அஞ்சலிக் கவிதைகள் நூற்றுக்கும் மேற்பட்டவையாகும். பூவை சரவணன் மிகுந்த இறைபக்தி கொண்டவர். இதனால் முருகக் கடவுள் மீது இவர் பாடிய சில கவிதைகளைத் தொகுத்து இரண்டு சிறிய நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். இவருடைய பல கவிதைகள் இலங்கை வானொலியில் "**கவிதைக் கலசம**" நிகழ்ச்சியில் ஒலிபரப்பட்டதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இயற்கை அனர்த்தங்களின் போது சூறாவளி, 2004 சுனாமி என்பவற்றின் போது இவர்பாடிய கவிதைகள் பலரது பாராட்டையும் பெற்றவை. 2004 சுனாமி இவரது வாழ்வில் ஒரு துன்பகரமான நிகழ்வை ஏற்படுத்திச் சென்றது. சுனாமியினால் இவரது இரண்டு குழந்தைகளை இவர் இழக்க நேரிட்டது. இவ்விழப்பின் வலியினால் இவர் எழுதிய சுனாமி சம்பந்தமான கவிதைகளைப் படிக்கும் போது நம்மையும் துயர் வாட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எமது நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியது. இவ்வாண்டுடன் பத்து வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில் சுனாமியின் நினைவாக **"பூவைசரவணன்"** ஒவ்வொரு வருடமும் எழுதிய கவிதைகளில் சில தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு சிறிய தொகுப்பாக இவ்வருடம் வெளியிடப்படுகின்றது. தனது குழந்தைகளின் நினைவாக இத்தொகுப்பை வெளியிடும் பூவை சரவணனுக்கும், இன்னும் பலரையும் இழந்து தவிக்கும் எண்ணற்ற உறவுகளுக்கும் இவ்வேளையில் இறைவன் மனோதிடத்தைக் கொடுக்க வேண்டுமென பிரார்த்தித்து இதனை நிறைவு செய்கின்றேன்.

**எஸ். அரசரெத்தினம்**
**தலைவர்**
**சைவமகாசபை**
**கல்முனை.**

**"ராஜ்பதி"**
V.V.**றோட்,**
**கல்முனை-02**
**24.12.2014**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆழிப்பேரலை ஊழியைத்தந்து
ஆண்டு பத்து ஆகிற்று இந்நாள்
ஆதலால் உங்கள் அன்பன் பூ வை
ஆண்டிற்கு ஆண்டு மார்கழி இருபத்தாறதனில்
அழுகையால் எழுந்த கண்ணீர்ப்பெருக்கம்
கவிதை வரிகளை தேடி உங்கள்
கைகளில் தவழ நாடியது உள்ளம்

வருடங்கள் பத்தும் வரித்திய பாக்கள்
வற்றிய கண்ணீர குளத்துள் முளைத்ததே
உற்றவர் சுற்றவர் என் உதிரத்தில் உதிர்த்தோர்
அத்தனை பேரின் ஆத்ம சாந்திக்காய்
அன்பர்கள் நண்பர்கள் ஆதரவூ ட்ட
உம்பரை நினைத்து உளமது தேறி
உதிர்க்கும் கண்ணீரில் இன்றும் என்றும்
சமர்ப்பணம் செய்கின்றேன் சாந்தி அடைவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த உயர்கள் இறையடி சேரும்

ஆழிப்பேரலையின்
அனர்த்தம் நிகழ்ந்து
ஆண்டுகள் இரண்டு ஆகி
முடிந்தது
ஊழிப்பெரு வெள்ளம் போல்
ஊரை அழித்தது
பிணக்காடாய் மாற்றியதை
மறக்கமுடிந்திடுமோ?
கருணைக்கடல் என்போம்
காவு கொண்ட உயிர்கள்
ஆயிரம் ஆயிரமே
மண்டு மனைகள் எல்லாம்
துண்டு துண்டாயிற்று
சொத்தை இழந்தவர்கள்
சேர்த்துக்கொண்டார்
சொந்தத்தை இழந்தவர்
ஏக்கம் கண்டார்

ஆறுதல் தந்து மனதை
ஆற்றுப்படுத்த யாரால்முடியும்?
தோற்றம் தந்த உள்ளம்
தெளிவு கொள்ள
தெய்வம் ஒன்றே
திருவருள் செய்யும்
இழந்த உயிர்கள்
இறையடி சேர
இறைஞ்சுவோம் இறைவனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூவைசரவணன்

# எழுந்த கடலும் அழிந்த உறவும்

வெண்ணுரை கக்கி நிற்கும்
விரி கடலைப் பார்க்கின்றேன்.
தன்னுரைகக்கி தன்னுயிர் போகையிலே.
என்னென்ன எண்ணங்களோ

எண்ணி மூன்று வினாநாடிக்குள்
எத்தனை உயிரழிப்பு ஏகனே
உன்செயலில் இதுவும் விளையாட்டோ
இமைப்பொழுது வேளையிலே.




நாட்கள் மாதங்கள் நகர்ந்ததால்
நாளங்கள்உறைந்து இன்று
கோலம் அழிந்த குவலயத்தில்
வருடங்கள் மூன்று வருகிறதே

சிதைபட்டுப்போன வாழ்வை
சீர் செய்ய முடியாத
கதியற்ற மனிதரை தினம்
காண நெஞ்சு துடிக்கிறதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவைத்தேடும் படலம்.
ஓயவில்லை வாழ்வில்
இறையை நாட மனம்
ஏற்குதில்லை தினம்

சுனாமி என்ற பெயரில்
சுருண்டு எழுந்த கடலால்
அனாதை ஆக்கப்பட்டோர்
ஆயிரம் ஆயிரம் கண்ணா.



பாற்கடலில் உறங்கி நீ
பால் கொடுத்த தாலோ
வெண்ணுரை கக்கியவர்
விண்ணுலகை அடைந்தாரோ?

வெண்பா காலத்தே நீத்தோர்க்கு
விமோசனம் என்கின்றார்
அன்பாய் கேட்கின்றோம் கண்ணா.
எங்களுக்கும் பால் கொடு.

பால்மா இல்லாது மண்ணில்
பாலர்கள் மடிகின்றார்
அவர்களுடன் நாமும்
அடைவோம் சுவர்க்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி இருபத்தாறு

பாலன் பிறப்பிற்கு மறுநாள்-எங்கள்
நாளங்கள் அடங்கிய கரிநாள்
கடல் அன்னை கரையை
தடம் புரட்டிய பெருநாள்
இன்று நேற்று என மக்கள்
இதயச் சுவருக்குள்
நினைவிற்கு அப்பால் நினைவுச் சுமைகள்
மூடிய கண்கள் திறந்தாலும்
முடிவடையாத சுனாமி சுவடுகள்
நாட்கள் நகர்ந்து இன்று
வருடங்கள் நான்கை விழுங்கியது
மார்கழி இருபத்தாறு வந்தால்
நீர்க்கோலம் கொண்ட முகங்கள்
நெஞ்சத்துள் எழும் துன்ப ரணங்கள்
அகதிகள் முகாங்கள்
இன்னும் மூடப்படவில்லை
முணங்கல்கள் தொடர்கதைதான்
அடம்பன் கொடிகளும்
இராவணன் மீசையும்
வளர்ந்து உயர்ந்தது புதிய
மீள் கட்டமைப்பு வீடுகள்
நீள் கட்டமைப்பாய் ஆனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றில்லா வாழ்க்கை படர்கிறது...

வரண்டு போன
வாழ்வியல் வட்டத்துள்
சுருண்டு போன
வாழ்க்கைச் சுவடுகள்

போரும் சுனாமியும்
பொது ஆனது
யுத்தமும் முடிந்தது
அலைச் சத்தமும் மடிந்தது

ஆயினும் அகற்றப்படாத
அகதி முகாம்களின்
அவலங்களும் அழுகை
ஓலங்களும் கைப்புண்தான்

வியக்கின்றார்கள் பாவம்
செங்கம்பள விரிப்பைக் கண்டு
போர்த்த கம்பளம் அற்ற
சித்தர்கள் இவர்கள்
சரித்திரம் படைப்பது
எப்படி சாண் வயிறு
புடைக்கின்றது

புது வடிவ அரசியல்
புத்தாடை
கரைகள் பளபளக்கின்றன.

கறைபடிந்த தகடுகளும்
வானத்து நீருக்கும்
விழுகின்ற சூரியனுக்கும்
வரவேற்பு பாடுகின்றன

ஐந்து ஆண்டு ஆகின்றது
ஆகுதில்லை அடுக்குமாடி
மீள்குடி அமர்வு
பேருக்கு விழா
பெருமைக்கு புகழாரம்

ஆரும் கண்டுகொள்ள
மாட்டார்கள்
அகதி முகாமென்று
பகலில் ஓட்டைகளும்
இரவில் இருட்டுக்களும்

பூவைசரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை கூப்பி வணங்குகின்றோம்

உதிர்ந்து போன அந்த
மரத்தில் இன்னும்
துளிர் இலைகளைக் காணவில்லை
இனிக் காண முடியாதாம்
சுனாமித் தண்ணீரை
குடித்து களித்த மரமது
மரம் மட்டுமல்ல இங்கு
சில மனித மனங்களும் அப்படித்தான்
கடலம்மா நீ எங்களுக்கு
திருப்பித்தராத கடன் பட்ட
அம்மாவாய் ஆகிவிட்டாய்.
இன்னும் உன்
அலை ஆடும் கரையில்
கால் பதிக்க மறுக்கின்ற
மனங்கள் தான் எத்தனை எத்தனை
ஆலயம் பலவற்றின் தீர்த்தத்தில்
உனக்கு பன்னீரால் இளநீரால்
ஏன் பஞ்சாமிர்த அபிசேகம் பண்ணி
புனிதவதி நீ என்று
புகழ் பாடிய காலங்கள்
நெஞ்சினில் நிழலாடுகின்றது.
நீ கரை கடந்த நாள்
நெருங்க நெருங்க
மார்கழி இருபத்தி ஆறு என்றால்
தாய் மடி துடிக்கின்றது
தந்தை உடல் நடுங்குகிறது
சோதரன் சோதரிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிப்பை தேடுகின்றனர்
திடுக்கிட்டு விழிக்கின்றனர்.
அம்மா அப்பா என்ற அலறல்களுடன்
உன் காதுகளில் கேட்டிடுமே உறவுகளின் ஓலமும்
ஆண்டு ஆறு ஆகியும்
முன்னர் போல்
ஆழி சமுத்திரம் வெள்ளலைகடல்
வேலை விரிகடல் .............
என்ற பெயர்களை
ஜீரணிக்க மறுக்கிறது
சீவன்களை இழந்த ஜீவன்கள்
சுனாமிக் கடல் என்ற
புதிய நாமத்துடன்
ஆண்டு ஐந்தை கடத்திவிட்டாய்
புதிய பெயருடன் வந்து எங்களை
மீண்டும் அனாதைகள் ஆக்காதே
கையெடுத்து கூப்புகின்றோம்
கடலம்மா உன் தனக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை தந்த சோகம்...


இயற்கை தந்த சோகத்திற்கு
வயது ஏழு எனினும்
இழந்து போன உயிர்கட்கு
கருவறை இருந்து கல்லறை நூறு
'நெருதல் உளநொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு'
பொருந்திப் போனோர் எத்தனை பேர்
உறவுகளை எண்ணி
உதிர்கின்ற கண்ணீர்
ஓயாது அவர் இவ்வுலகை விட்டு
ஏகும் வரை என்பது கண்கூடு நியதி
வெள்ளத்துள் கண்ணீரை
கொட்டிடும் மனிதரை விதத்துரைக்கும்
வேற்றுக்கிரகத்து மனிதரும் இங்குளர்
விடியலை விரும்ப மாட்டார்
மழையை அழச் சொல்லாதீர்கள்
வானத்தை விழச் சொல்லாதீர்கள்
உண்மையை ஒழிக்காதீர்கள்
உறங்கிய பின் தாலாட்டாதீர்கள்
அளவு கோலை கையில் எடு
அறிவை ஆற்றலை அளந்து கொள்
சமுகத்தின் சேவையை உணர்ந்து
பறைசாற்றிப் புறப்படத் தெரிந்து கொள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதித்த நாளில் உதிர்ந்த துளிகள்

இறைவா உனக்கு திருவிழா இன்று
எங்கள் வாழ்வில் உயிர் உலா
இறுகிறது நெஞ்சம் இயலவில்லை கொஞ்சம்
வந்தது மகள் உதித்த தினத்தில் தீர்த்தம்

காலம் பல கடந்தாலும் புதுசா
கற்பனைக்கு வந்தால் மிக பெரிசா
ஆவணியில் வந்த மகள் கிரிசா
தாவணியில் உலாவருவாள் ஒருதினுசா



அவள் புராணம் இசைத்தாள் அன்று
நான் புலம்பி இசைத்தேன் இன்று
அவள் கோலங்கள் போட்ட இடத்தில்
நான் கண்ணீரால் கோலம் போட்டேன் தடத்தில்

இறைவணக்கம் அவர்க்கு பெரும் அலாதி
எனை அழைப்பாள் தோள் தடாவி
மாலை புனைந்து சாற்ற நாம்
மறந்ததில்லை காலம் போதும்

தனியே பூப்பறிக்க தாளாது மகள்
தங்கைகயயும் கூட்டிச் சென்றாள் அன்று
இனி எப்போ இருவரும் வருவார் என்று
இரு விழியும் சொரிகிறது இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைபடிந்த காலம் ஒன்பதை கடக்கின்றோம்

அலை கடலின் பேரலைகள்
நிலை குலைய வைத்த காலம்
நினைக்க முடியாமல் எம்மை
நெட்டுயிர்ப்பு கொள்ள வைத்ததே

உலையில் இட்ட மெழுகாகி
உறவுகளை நினைவில் இட்ட
கறைபடிந்த காலம் ஒன்பதை
நிறைவு செய்யும் நேரம் இதோ

பறை ஒலியும் கேட்கவில்லை
பாடை கட்டி சுமக்கவில்லை
இவரா அவர் என்று நாம்
ஏக்கம் கொண்டு புதையில் இட்டோம்

கவின் கொண்ட கரையோரம்
கலை இழந்து போனதுவே
திடம் தந்த மனங்களெல்லாம்
சீரழிந்து சிதைந்ததுவே

ஓசை இல்லா சிலம்பது போல்
உறவுகளும் அப்படித்தான்
பாசங்கள் வேசமாகி இன்று
பகை கொண்டு வாழுதம்மா
கடலம்மா..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாவது ஆண்டில் பகிந்தலை

ஆண்டுகள் பத்து ஆகிற்றே
அலைகடல் மனம் வேகிற்றே
காற்றடித்து வீழ்ந்தாலும் கிடந்திடுமே
கடலலையில் போனஉடல் கண்டிலோமோ

போரில் காணாமல் போனோரை
புரிந்துணர்வு திரைபோட்டு தேடுகின்றோம்
நீரில் காவி போனோரை
போர்ரில் உரைபோட்டு தேடுவோமோ

நினைவலைகள் நெஞ்சைப் பிளக்கிறதே
கனவலைகள் கண்களை நிறைக்கின்றதே
உயிரினும் உயிரான உறவுகள்
உமிழ்ந்த வெண்நுரையாய் போயினரே

கங்கையாள் கோபம் கொண்டாளே
கடலுள் புகுந்து நிறைத்தாளோ
வஞ்சம் தீர்க்க வந்தவள் போல்
வாரி நீரை இறைத்தாளே

நேற்றைய நிகழ்வாய் நிலைக்கிறதே
நெஞ்சம் கனத்து தவிக்கிறதே
கொஞ்சு மொழி பிஞ்சு மகள்
கோலம் போடும் குமரி மகள்

வஞ்சகம் இல்லா உறவுகளும்
தஞ்சம் இன்றி தவித்தனரே
தங்க ரதத்தின் வடமறுந்து
தலை கீழாய் கவிழ்ந்தாற் போல்

பத்தாண்டு கடந்து சென்றாலும்
புத்தாண்டு புதிதாய் பிறந்தாலும்
கத்தும் கடலலை உயிர் காவியதை
கடுகதியில் மறக்க முடிந்திடுமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பதில் சொல்லும்

எங்களைப் பார்த்தால் உங்களுக்கு
அலாதியான கேலிச்சிரிப்புடன்,
நையாண்டி நகைப்போ?

பொங்கி வந்த கடல்
புறம் தள்ள விட்டதனால்
அறம் பிழைத்துப்போனீரோ?

வீடு வாசலில்லை புதிதாய்
வெளுத்து கட்ட துணியில்லை
அவர்கள் மானம் அவர்களுடன்

கண்டவுடன் கதை பேசி
கனதியாய் சுகம் கேட்டு
முதலைக்கண்ணீர் வடிக்கின்றீர்

ஆண்டு மூன்றுக்குள் அவர்க்கு
ஆயிரம் கதை சொன்னீர்
அடுக்குமாடி ஆகுமென்று

பேரணி நடத்த என்றே
ஆளணி திரட்ட வந்தீர்
ஓரணியும் பயனில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குப் போனாலும் கூலிக்கு
வேதனத்தை குறைக்கின்றீர்
ஆகதி எனும் முத்திரையால்

பாம்பு, பூ ரான், மரவட்டை இங்கு
பரந்து அணி வந்தாலும்
பறவாயில்லை நீங்கள் அல்ல அவர்கள்

எங்களுக்கும் புள்ளடிக்கு நாட்டில்
இருக்கின்றதாம் உரிமை மனிதா
எதிர்காலம் வரும்

ஆண்டிக்கு ஆண்டி பகை பழமொழி
ஆகதிக்கு எங்கும் ஊரில்
அனைவரும் பகையே

வேண்டுமென்றா அகதி ஆனார்
விதியின் பயன் என்றால்
விளையாட்டு உங்களுக்கு

இறந்தால் உங்களுடன் எம்மை
இடுகாட்டில் புதைப்பார்கள்
எவர் என்ன சொன்னாலும்

தீர்ப்பு நாள் ஒன்றுவரும் நீ
திருந்தினால் சுகம் காண்பாய் இன்றில்
வருந்தி வதை ஏற்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவி உடைக்குள் ஓர் கடவுள்...

எப்படி மறப்பது உங்கள் இதய சேவை தனை
கல்லுக்குள் ஈரம் கசிந்துதான் வரும்
உங்கள் சொல்லுக்குள் அன்பு என்றும்
சொரிந்து கொட்டிக்கொண்டிருக்கிறது

சுனாமியின் பின்னர் தாம் சோகம் கௌவி இருந்தோம்
அனாதையாய் வீதிகளில் அலைந்து அல்லல்பட்டோம்
கண்ணீரால் முகம் கழுவி கரைதேடும் ஓடமானோம்
காக்கும் கடவுளாய் காவி உடைக்குள் ஓர் கடவுள் "சுவாமி விமல"

பாதையில் நின்ற எம்மை பாசமாய் அழைத்து நல்ல.
நேச உறவு தந்து நெஞ்சை ஆற்றுப்படுத்தி.
நிம்மதியாய் நித்திரைக்கு நீர் தந்தாய் தற்காலிக தரிப்பிடம்
உளமாற நினைக்கின்றோம் உம் நிழலான உணர்வு தனை

தேவையறிந்து சேவை செய்த செம்மல் ஐயா நீர்.
காலமறிந்து கருணைபூ த்த காருண்யர் நீர்.
கனதூர இடைவெளியை கண்ணிமைக்குள் வைத்தீர்கள்
காலத்தால் மறவா நற்காரியம் கனக்க வைத்தீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவைசரவணன்

மன ஆறுதல் தந்து எமை ஆற்றுப்படுத்திநீர்
தேறுதல் தந்து அனைவரையும் தேற்றுவித்தீர்
கூர்மை விளிக்குள் நற்குழைவு கண்டோம்
கும்பிடும் கைகளை கோலங்கள் போடவைத்தீர்

மாணவர் கல்விக்காய் மாதம் ஓர் ஆயிரம்
மனநிறை வணக்கத்திற்கு மகிழ்வான ஆலயம்.
நிம்மதியாய் வாழ நிரந்தர வதிவிடமும்
நேர் நின்று செய்தீர் "நிமலனாய்" ஆகிவிட்டீர்

என்றும் எமது இதயத்துள் பூ ர்த்த மலர்
நன்றே செய்து நாம் வாழ வழிவகுத்தீர்
நெடுநாள் நீங்கள் வாழ நினைத்து வேண்டுகிறோம்
வரும் நாள் சுகமாகும் சமாதான சிற்பியரே

**தேக்கம்சோலை அகதிமுகாம் கல்முனை பூவை சரவணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவெலா நன்றிகள்

கடந்த 2004 மார்கழி 26ல்
கரைகடந்த கடலின் அழிவுத்துயர்
சம்பவங்களினால் என்
உள்ளக்கிடக்கையில் ஆண்டுக்கு
ஆண்டு உதித்த கவிதை வரிகளை
ஒன்று கூட்டி சிறிய இதழாக வெளிக்
கொணர நான் விழித்த போது
எனது ஆலிங்கத்தை
கருத்தில் கொண்டு உங்கள்
எண்ணம் நிறைவேறும் என உறுதி
அளித்து கவிதைகளை
ஒருங்கிணைத்து முன்னுரையும் தந்து
கண்ணீர்க் கடல் பத்தை
எம்கைகளில் தவள பெரும் காரியம்
செய்த அண்ணல்
அரசரெத்தினத்துக்கும் ஏனைய
நண்பர்களுக்கும் கணனி
வழிக்கொணர்ந்த
திரு.இ.தில்லைநாயகம்,
திருமதி.ஆர்.ரம்மியா ஆகியோருக்கும்
இதழ் வடிவமைத்த பிரிலியன்ட்
நிறுவனத்திற்கும்
எனது நாவெளா நன்றிகள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org